**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180 /2023**

**Deposition of P.W.** 9

Name : திருமதி. ஜானகி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.02.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தற்போது திருநெல்வேலி மாவட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் சிறப்பு பாதுகாப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண். 59/2023 பிரிவுகள் 341, 294(பி), 307, 506(2) இ.த.ச படியான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 28.02.2023ம் தேதி 13.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேம்ராஜ், ஆன்றோ ஆகியவர்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6. பின்னர் அதே சாட்சிகள் முன்பு எதிரி விட்டு சென்ற இருசக்கர வாகனமான TN 72 AP 554 மற்றும்

உடைந்த கேரியர் ஒன்றையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் வழக்குச் சொத்தையும் நிலையம் கொண்டு வந்து படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 அ.சா.ஆ.7. TN 72 AP 554 இருசக்கர வாகனம் சா.பொ.1. உடைந்த கேரியர் சா.பொ.2 (சா.பொ.1 இருசக்கர வாகனத்தை எதிரி நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்றுள்ளனார்.) பின்னர் சாட்சிகள் ஜஸ்டின் ராஜ், பேபி, சாகாயம் , ஷீலா, ஆன்றோ, சேம்ராஜ், ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். காயம்பட்ட சாட்சியான ஜஸ்டின்ராஜ்–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. ராமேஷ்வர் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்றேன். அவரிடம் வாக்குமூலமும் பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதியை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரியல்ல. அன்றைய தினம் அவர் காவல்துறையில் பணிபுரியும் நபர் என்பது தெரியும். எனது விசாரணையில் எதிரி மீது தக்கலை காவல்நிலையத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தெரியவில்லை. அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலான நபர்கள் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில அஜின், கிறிஸ்டோபர் மற்றும் பிரேம்குமார் ஆகியவர்களின் வீடுகள் உள்ளதாக மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. புகார்

.3.

மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் புகார்தாரரின் வாகன எண்.TN

75 M 0940 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் வாகனத்தை நான் பார்வையிடவில்லை. புகார்தாரரின் வாகனத்தை பார்வையிடாததால் அதில் என்ன சேதம் ஏற்பட்டிருந்தது என்பது எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரரின் வாகனத்தை நான் கைப்பற்றவும் இல்லை. வரைபடம் மற்றும் அத்தாட்சியில் புகார்தாரர் வாகனம் காட்டப்படவில்லை. TN 75 M 0940 என்ற வாகனம் புகார்தாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த வாக்குமூலத்தில் எதிரி கேரியரை எடுத்து அடித்து உயர்த்தி காட்டி கொன்று போடுவேன் என்று மிரட்டி விட்டு ஓடிவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கிற்காக கேரியர் சம்பவ இடத்தில் கிடந்ததாக பொய்யாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. ஆத்தவிளைக்கும் – நல்லவிளைக்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் தூரம் ஞாபகமில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட சாட்சியை நான் தக்கலை அரசு மருத்துவமனையில் வைத்து 28.02.2023ம் தேதி 14.30 மணிக்கு விசாரித்தேன். எனது விசாரணையில் TN 72 AP 554 என்ற வாகனத்தில் இடித்து தள்ளியதில் தான் மின்கம்பம் அருகே குதித்து நின்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரி மார்பில் எட்டி மிதித்ததில் கீழே விழுந்ததில் இடது கணுக்காலிலும், வலது முழங்காலிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாக வாக்குகுமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பைக்கு கேரியருக்கும், இரும்பு



கம்பிக்கும் வித்தியாசம் உண்டு என்றால் சரிதான். காயம்பட்டவர்

மருத்துவரிடம் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது கம்பியால் தாக்க பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். வலது காலால் மிதித்ததில் நெஞ்சில் காயம் பட்டதாக கூறவில்லை. காயம்பட்டவர் வலது கண்ணிற்கு கீழ் ¼ x ¼ அளவிற்கு சிதைந்த காயம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வலது கால் முட்டியை சுற்றிலும் வலி இருப்பதாக தான் கூறியுள்ளார். காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு சேம்ராஜ் என்பவர் அழைத்து சென்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். 28.02.2023ம் தேதி விசாரணையை ஆரம்பித்து 19.03.2023ம் தேதி முடித்தேன். 19.03.2023ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. புகார்தாரர் காவல்துறையில் பணிபுரிவதாலும், எனக்கு தெரிந்த நபர் என்பதாலும் ஒரு மாத காலத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், அ.சா.1க்கும் சொத்து பிரச்சனை உள்ள விபரம் எனது விசாரணையில் தெரிய வந்தது. சொத்து பிரச்சனையில் உள்ள முன்விரோதத்தை வைத்து 28.02.2023ம் தேதி காலை நல்லவிளை என்ற இடத்திற்கு வந்த போது அ.சா.1ம் அவரது தம்பிகளும் சேர்ந்து எதிரியை தடுத்து நிறுத்தி அடித்து துன்புறுத்தி வாகனத்தை பறித்து கீழே போட்டு திருவட்டார் காவல்நிலையத்திற்கு அலைபேசியில் அழைத்து அ.சா.1ஐ எதிரி தாக்கியதாக சொல்லி எதிரியை பிடித்து காவல்துறையில் ஒப்படைத்து எதிரி மீது நடக்காத ஒரு சம்பவத்திற்கு நடந்ததாக பொய் புகார் கொடுத்து எதிரியை பிடிக்கும் போது பிடிவலியில் ஏற்பட்ட சிறு காயத்தை வைத்து மருத்துவமனைக்கு சென்று பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்று சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.